பக்கங்கள் 24+4

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 12 திங்கட்கிழமை 26.01.2026 | அதிர்வு 180

## அநுர அரசுக்கு பொன்சேகா பாராட்டு மழை

### ஆதரவு வழங்கவும் முடிவு



“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமை யிலான தேசிய மக்கள் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### நாட்டின் ஒருமைப்பாட்டை விரும்பினால்

# கிவுல் ஓயாத் திட்டத்தை முழுமையாகக் கைவிடுக!

### அரசிடம் “சங்கு“ வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

“மகாவலி எல் வலயத்தை உள்ளடக்கி புதிதாக நிர்மாணிக்கப் படும் கிவுல் ஓயாத் திட்டம் ஏற்கனவே இருந்த அரசுகளைப் போல் தமிழ் மக்களின் காணிகளைப் பறித்து அரச அனுசரணையுடன் தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்துவதையும், வடக்கு - கிழக்கு நிலத் தொடர்பை நிரந்தரமாகப் பிரிக்கும் உள்நோக் கத்தையும், இந்நாட்டின் பூர்வீக குடிகளான தமிழர்கள் 02

### எந்தவித நிபந்தனைகளும் இன்றி

# கூட்டமைப்பாக இணைந்து செயற்பட ‘சங்கு’ தயாராம்

### தமிழரசின் தலைவர் அறிவிப்பு



ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியானது எந்தவித நிபந்தனை களும் இன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து செயற்படு வதற்குத் தயாராகவுள் ளது என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின்தலை வர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இது தொடர்பில் மட்டக் களப்பில் நேற்று அவர் மேலும் கூறுகையில்,

“இலங்கைத் தமிழர சுக் கட்சியைப் பொறுத்த வரையில் முதன்மைக் கட்சியாக இருந்தாலும் கூட தமிழ்த் தேசியக் கட்சி களை 05

## இந்தியாவின் 77 ஆவது குடியரசு தின நிகழ்வு!



இந்தியாவின் 77 ஆவது குடியரசு தின விழா இன்று கொண்டாடப் பட்டது. கொழும்பில் உள்ள இந் தியன் இல்லத்தில் இன்று காலை நடைபெற்ற நிகழ்வில் இலங்கைக் கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். (மேலும் படங்கள் 3 ஆம் பக்கத்தில்)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## கிவுல் ஓயா

தமது சொந்த பிரதேசத்திலேயே இரண்டாம் தரக் குடிமக்களாக மாற்றுவதையும் நோக்க மாகக் கொண்டுள்ளது. எனவே, இந்தத் திட்டம் முழுமையாகக் கைவிடப்பட வேண்டும் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி, அநுர அரசை வலியுறுத்து கின்றது."

– இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந் திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இன்று விளக்க மான அறிக்கை ஒன்றை வெளியிட் டுள்ளார்.

அவரது அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:–

"வவுனியா வடக்கு பிரதேசத்தையும், முல்லைத்தீவு – மணலாறு பிரதேசத்தை யும் உள்ளடக்கக்கூடிய வகையில் 23 ஆயிரத்து 456 மில்லியன் ரூபா செலவில் கிவுல் ஓயா என்ற ஒரு நீர்ப்பாசனத் திட் டத்துக்கான அணைக்கட்டு ஒன்றைக் கட்டுவதற்கு இப்பொழுது ஆட்சியில் உள்ள அநுரகுமார அரசானது 2 ஆயி ரத்து 500 மில்லியன் ரூபாவை முதல் கட்டமாக ஒதுக்கியுள்ளது.

இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் இவ்வேலைத்திட்டமானது 2031ஆம் ஆண்டு முடிவுறுத்தப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

இந்தத் திட்டம் 2011ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் மகாவலி 'டு' ஸ்கீமுடன் இணைந்ததாக உருவாக்க முயற்சி செய்தபோதும் பின் னர் அது கைவிடப்பட்டது.

இப்பொழுது இந்த அரசு மீண்டும் அதே திட்டத்தை நிறைவேற்றுவதற் கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல வேறுபட்ட குளங்கள், வயல்களை உள்ள டக்கி ஏற்கனவே மணலாற்றுப் பிரதே சத்தை சிங்களமயமாக்கி அதற்கு வெலி ஓயா என்று பெயரும் சூட்டப்பட்டு வெளி நாட்டிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள் வதற்காக அது மகாவலி 'டு' வலயம் என்று பெயரும் சூட்டப்பட்டது.

இந்த மகாவலி 'டு' வலயத்துக்கு எந்தக் காலத்திலும் மகாவலி நீர் வரமாட்டாது என்பதை மகாவலி அதிகார சபையின் உயர் அதிகாரிகளே நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றில் தெளிவுபடுத்தி யிருக்கின்றார்கள்.

யுத்தத்தின் பின்னர், இதனை ஒட்டிய பிரதேசங்களில் உள்ள கொக்கச்சான் குளம் என்ற கிராமம் போகஸ்வெவ என்றும், அதனையொட்டி மற்றொரு கிராமத் துக்கு நாமல்புர என்று பெயரும் சூட்டப் பட்டு அம்போந்தோட்டை, மாத்தளை போன்ற தூரத்திலுள்ள சிங்களப் பிர தேசங்களிலிருந்து சிங்கள மக்கள் அழைத்து வரப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளனர்.

இப்பொழுது கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் தமிழ் மக்கள் விவசாயம் செய்துவரும் பதினைந்துக்கும் மேற்பட்ட சிறிய குளங்களும், அதனை ஒட்டிய வயல் நிலங்களும், வவுனியா வடக்கில் உள்ள பல பழந்தமிழ் கிராமங்களும், அதன் குளங்களும், வயல் நிலங்களும் கிவுல் ஓயாவின் நீரேந்தும் பிரதேசத்துக்குள் மூழ்கடிக்கப் போகின்றன. இதன் காரண மாக ஏற்கனவே வாழ்வாதாரங்களை இழந்து சிறுகச்சிறுக தமது விவசாயத்தை மேற்கொண்டு வரும் தமிழ் மக்களை மீண்டும் விரட்டியடிக்கும் நிலை தோன்றி யுள்ளது.

முன்னர் இருந்த அரசுகள், முல்லைத் தீவு, வவுனியா மாவட்டத்தின் எல்லைப் பிரதேசங்களைச் சிங்கள மயமாக்கும் நோக்குடன் ஏற்படுத்திய குடியேற்றங்கள் இப்பொழுது இந்த ஆட்சியின் கீழ் விஸ் தரிக்கப்பட்டு, மகாவலி நீர் வராத போதும் கிவுல் ஓயா என்ற புதிய நீர்ப்பாசனத்திட்டம் ஒன்றை உருவாக்கி, மிச்சம் சொச்சமாக அங்கு வாழ்ந்து வரும் தமிழ் மக்களை யும் வெளியேற்றுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

"இந்தத் திட்டம் இன அடிப்படையில் முன்னெடுப்பதாகக் கூறப்படுவது தவறா னது. அரசியல் உள்நோக்கம் கொண்டது. தேசிய அபிவிருத்தி, விவசாய வளர்ச்சி, நீர்வள முகாமைத்துவம் இவைகளை முன்வைத்தே அரசாங்கம் இத்திட்டத்தை செயற்படுத்துகின்றது. எமது அரசில் இனவாதம், மதவாதம் இல்லை. மக்களை சமமாகக் கருதுகின்றோம். தமிழ் மக்க ளின் நிலவுரிமை, சமூக உரிமை பாதுக் கப்படும். சட்டத்துக்கு முரணாக நிலம் கையகப்படுத்தல் நடைபெறமாட்டாது. திட்டம் தொடர்பாக சகல நடவடிக்கைகளும் உரிய சட்ட நடைமுறைகளின் கீழேயே நடைபெறும்" என்று அமைச்சர் சந்திர சேகர் திருவாய் மலர்ந்திருக்கின்றார்.

இலங்கையின் முதலாவது பிரதம ராக இருந்த டி.எஸ். சேனநாயக தொடக் கம், இன்றிருக்கின்ற ஜே.வி.பி. அரசு வரை யில் விவசாய அபிவிருத்தி, அதற்கான நீர்ப்பாசனத் திட்டங்கள் என்ற போர்வை யில் வடக்கு – கிழக்கில் பல்லாயிரக்கணக் கான சிங்கள மக்களை வலிந்து குடி யேற்றியதனூடாக அந்தப் பிரதேசத்தில் வாழும் தமிழ் குடிப்பரம்பலை மாற்றிய மைத்து, அந்தப் பிரதேசங்களில் பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழ் மக்களை சிறுபான்மையினராக்கி நாடாளு மன்றத்தில் தமிழர்கள் தமது பிரதி நிதித்துவத்தை இழக்கக்கூடிய அளவுக்கு இந்தக் குடியேற்றங்கள் நடந்துள்ளன. இப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

கபினட் அமைச்சராக இருக்கின்ற தமி ழரான சந்திரசேகர் போன்றவர்களுக்கு இந்த வரலாறு தெரியாமல் இருக்கலாம். இவர் கூறுகின்ற சட்டத்துக்கு முரணாக எதுவும் செய்யப்பட மாட்டாது என்பதும், சட்ட நடைமுறைகளுக்கு இணங்கவே இந்தத் திட்டம் தொடர்பான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் என்பதும் தமிழ் மக்களின் காதுகளில் பூச்சுற்றும் வேலை.

இவர் இங்கு எந்தச் சட்டத்தைப் பேசுகின் றார்? இதுவரை காலமும் ஆட்சி செய்து வருகின்ற அரசுகள் தமக்கு ஏற்ற வகை யில் நில அபகரிப்பை மேற்கொள்வதைத் தான் சட்ட நடவடிக்கை என்று இவர் சொல்கின்றாரா? இது ஓர் இனவாத நடவடிக்கை அல்ல என்றும் இவர் நிரூபிக் கப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றார். பழந்தமிழ் கிராமங்களை நீரில் மூழ்கடித்து, புதிதாக உருவாக்கப்பட்ட சிங்களக் குடி யேற்றங்களுக்கு நீர்ப்பாசனம் வழங்குவ தும், புதிய சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதும் இனவாதம் என்றில்லா மல் வேறு எப்படி இதனை அழைப்பது?

எம்மைப் பொறுத்தவரையில், வவு னியா, முல்லைத்தீவு மாவட்டத்தின் குடி சனப் பரம்பலை மாற்றியமைக்கக்கூடிய தமிழ் மக்களை மீண்டும் அந்த மண்ணி லிருந்து விரட்டியடித்து ஏதிலியாக்கக்கூடிய இந்த நீர்ப்பாசனத் திட்டம் நிறுத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஜே.வி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நிலங்கள் பறிபோவதைப் பார்வை யாளர்களாக இருந்து பார்த்துக்கொண்டி ருப்பது ஏற்புடைய விடயமல்ல. நாளை உங்களது சந்ததியினரும் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பதை புரிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வாக்க ளித்த மக்களின் நலன் சார்ந்தும் உங்க ளின் வருங்கால சந்ததியினரின் நலன் சார்ந்தும் இத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டியது உங்களது கடமையும் பொறுப்புமாகும்.

சந்திரசேகர் போன்ற தமிழ் அமைச் சர்கள் மீண்டும் மீண்டும் நாங்கள் இன வாதிகள் அல்லர், மதவாதிகள் அல்லர் என்று கூறுவதற்குப் பதிலாக அரசு முன்னெடுக்கும் இத்தகைய இனவாத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த முன் வரவேண்டும். மாறாக நீங்களும் அமைச்சரவையில் இணைந்து இவை களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் இத்த கைய திட்டங்களுக்கு வக்காலத்து வாங்கு வதும் வருந்தத்தக்கது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்லா யிரம் மில்லியன் ரூபாய்களுக்குக் கடனா ளியாகி நாட்டை வங்குரோத்தில் வைத் திருக்கும் நீங்கள், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுகின்ற நோக்கில் மேலும் 23,456மில்லியன் ரூபாவை செலவு செய்ய முற்படுகின்றீர்கள் என்றால் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை யும் நாட்டில் அபிவிருத்தியையும் எவ்வாறு கொண்டு வருவீர்கள்?

உண்மையில் ஜனாதிபதி அவர்கள் நாட்டின் ஒருமைப்பாட்டையும் மக்களி டையே நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த விரும்பினால் இந்தத் திட்டத்தை முற்று முழுதாகக் கைவிடவேண்டும் என்று கோருகின்றோம்." – என்றுள்ளது.

---

## அநுர அரசுக்கு...

சக்தி அரசில் உள்ள அமைச்சர்கள் ஊழல், மோசடிகளில் ஈடுபடவில்லை. இதனைப் பாராட்ட வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையில் கடந்த காலங்களில் சட்டம், ஒழுங்கு இருக்கவில்லை. பணம் இருக்கும் இடத்தில்தான் நீதி இருந்தது. ஊழல், மோசடிகள் இடம்பெற்றன. குறுக்கு வழியில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதனால் பொதுமக்கள்தான் பெரி தும் பாதிக்கப்பட்டனர். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் உள்ளவர்கள் ஊழல், மோசடிகளில் ஈடுபடவில்லை. இதற்குரிய பாராட்டை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அதேபோல் நாட்டு மக்கள் எதிர் பார்க்கும் விடயங்களை இந்த அரசு நிறைவேற்ற வேண்டும். அதனை நோக்கிய பயணத்தின்போது எமது ஆதரவு வழங்கப்படும்." – என்றார்.

# கொழும்பில் இந்தியாவின் குடியரசு தின நிகழ்வு!

இந்தியாவின் 77 ஆவது குடியரசு தின விழா இன்று கொண்டாடப்பட்டது. கொழும்பில் உள்ள இந்தியன் இல்லத்தில் இன்று காலை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்த பின் நடைபெற்ற நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்O













# யாழில் இந்தியாவின் குடியரசு தின நிகழ்வு









(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவின் 77ஆவது குடியரசு தின நிகழ்வு, யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இன்று நடைபெற்றது.

யாழ். இந்தியத் துணை தூதுவர் சாய் முரளி இந்தியத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து இந்திய ஜனாதிபதியின் குடியரசு தின வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது. தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

















### ரணில் வழக்கை முன்னிறுத்தி

# சட்டமா அதிபருக்கு அரசியல் தூக்குக் கயிறு: நாட்டை அராஜக நிலைக்கு இட்டுச் செல்லும்!

### முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ எச்சரிக்கை



"இலங்கையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடம்பெறாத ஒழுக்கக்கேடான அரசியல் கலாசாரத்தின் ஆரம்பமாகவே சட்டமா அதிபரைப் பதவி நீக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இலண்டன் பயணம் குறித்த வழக்கை அடிப்படையாகக் கொண்டு சட்டமா அதிபர் மீது அரசியல் முத்திரை குத்தி அவரைப் பதவி நீக்க முயற்சிப்பது நாட்டை அராஜக நிலைக்கு இட்டுச் செல்லும் செயற்பாடாகும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் நீதி அமைச்சருமான விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சட்டமா அதிபருக்கு எதிரான ஆர்ப்பாட்டம் மற்றும் கணக்காய்வாளர் நியமனம் தாமதப்படுத்தப்படுகின்றமை தொடர்பில் ஊடகங்களிடம் தெளிவுபடுத்தும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கடந்த தேர்தல்களில் மக்கள் பெரும் எதிர்பார்ப்புக்களுடனேயே இந்த அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கினர். தேர்தலுக்கு முன்னர் அரஅது வழங்கிய பிரதான வாக்குறுதிகளில் ஒன்று சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதாகும். ஆனால் அந்த வாக்குறுதியை வழங்கிய ஜனாதிபதியும் இந்த அரசும் கணக்காய்வாளர் நாயகத்தை எப்போது நியமிக்கப் போகின்றனர் என்பதை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இடம்பெறும் சகல ஊழல், மோசடிகளையும் மறைப்பதற்கான சிறந்த முறைமையை அரசு தேர்ந்தெடுத்துள்ளது. கணக்காய்வாளர் இன்றி நாட்டை ஆட்சி செய்வதே அந்த முறைமையாகும்.

அரசமைப்புக்கமைய கணக்காய்வாளர் இன்றி நாட்டில் ஆட்சியை முன்னெடுக்க முடியாது. அதேபோன்று அரசமைப்புக்கமைய பிரதம நீதியரசர் ஒருவர் இன்றி ஒரு நாள் கூட நாட்டில் ஆட்சியை முன்னெடுக்க முடியாது. பிரதம நீதியரசர் இல்லாவிட்டால் ஒட்டுமொத்த நீதித்துறை கட்டமைப்பும் செயழிலக்கும்.

இந்த வரிசையில் சட்டமா அதிபரும் கணக்காய்வாளரும் இன்றி நாட்டில் ஆட்சி இடம்பெறாது. மாறாக இவர்கள் இன்றி முன்னெடுக்கப்படும் ஆட்சி ஜனநாயகத்துக்கு முரணானதாகும். கணக்காய்வாளர் பதவிக்குத் தகுதியான ஒருவரைப் பெயர் குறிப்பிட முடியாத நிலைமை அரசுக்கு ஏற்பட்டுள்ளது என்பதன் மூலம் அதன் பலவீனம் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காகச் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் செயழிலக்கச் செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதற்காக அரசின் ஆதரவாளர்களை ஏற்பாடு செய்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கின்றனர். எமது நாட்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடம்பெறாத ஒழுக்கக்கேடான அரசியல் கலாசாரத்தின் ஆரம்பமாகவே சட்டமா அதிபரைப் பதவி நீக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. தற்போதைய சட்டமா அதிபர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உதவியாள் எனக் கூறியே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால்தான் இந்தச் சட்டமா அதிபர் நியமிக்கப்பட்டார்.

அவரது பெயரை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்புப் பேரவைக்குப் பரிந்துரைத்த போது, அதன் உறுப்பினர்கள் எவரும் அதற்கு எதிர்ப்பை வெளியிடவில்லை. இந்நிலையிலேயே இந்த அரசு அவர் மீது அரசியல் முத்திரை குத்தி அவரைப் பதவி நீக்கம் செய்ய முயற்சிக்கின்றது. இது மிகவும் பாரதூரமான நிலைமையாகும்.

ரணில் விக்கிரமசிங்கவின் இலண்டன் பயணம் குறித்த வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வேறுபட்ட நிலைப்பாடு காணப்படுகிறது என்பதை நாம் அறிவோம். இந்த வழக்கில் மாத்திரமல்ல, எந்தவொரு வழக்கிலும் இவ்வாறான நிலைமை ஏற்படலாம்.

வழக்கறிஞர்கள் ஐவர் இருந்தால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் சிந்திப்பர். அந்தவகையில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ளக முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனைச் சட்டமா அதிபர் திணைக்களமே உள்ளகக் கலந்துரையாடல்கள் மூலம் தீர்த்துக்கொள்ளும். அதனை விடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களின் தேவைகளுக்கேற்ப சட்டமா அதிபரைப் பதவி நீக்கம் செய்ய முடியாது.

சட்டமா அதிபரின் தீர்மானத்துக்கு அப்பால் அரசால் செயற்பட முடியாது. மாறாக சட்டமா அதிபரின் தீர்மானத்தை சவாலுக்குட்படுத்துவதாயின் அதற்கு நீதிமன்றத்தை நாட முடியும். அதனை விடுத்து ஆர்ப்பாட்டங்கள் ஊடாக சட்டமா அதிபரை இழிவுபடுத்துவதானது நாட்டை அராஜக நிலைக்கு இட்டுச் செல்லும் செயற்பாடாகும்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**கூட்டமைப்பாக...**

இணைத்துக்கொண்டு பயணிக்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு உண்டு. அந்தப் பொறுப்பை ஏற்று அதற்கான பணிகளை இந்த வருட ஆரம்பத்தில் நாங்கள் தொடங்கியுள்ளோம்.

கடந்த உள்ளூராட்சி சபை, நாடாளுமன்றத் தேர்தலின்போது எதிரும் புதிருமாறு நின்ற ஜனநாயகத் தேசியக் கூட்டணியுடனான ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்றோம். அதில் ஒவ்வொரு கட்சியும் தங்களின் தனித்துவங்களைப் பேணிக்கொண்டு செயற்படுவது என்ற இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்றோம்.

மீண்டும் எங்களுடன் வந்து இணைந்து கொள்ளுங்கள் என்று நானும் எமது கட்சியின் பொதுச்செயலாளரும் அழைப்பு விடுத்திருக்கின்றோம். அந்த அழைப்பைத் தொடர்ந்து எங்களுடன் அவர்கள் பேசினார்கள். ஜனநாயகத் தேசியக் கூட்டணியைப் பொறுத்த வரையில் அவர்கள் எந்த நிபந்தனையையும் விதிக்கவில்லை. பரந்தமனப்பான்மையுடன் எங்களுடன் பேசினார்கள். அவ்வாறானதொரு நிபந்தனையற்ற இணைவுகளை ஏனையவர்களிடம் இருந்தும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

சிங்கள தேசியக் கட்சிகளால் எங்களுக்கு விடிவு கிடைக்காது. அவர்களது கட்சிக்குள் எங்களது மக்களும் ஊடுருவி நாடாளுமன்ற உறுப்பினர்களாக, உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். ஆனால், அவர்களுக்குச் சிங்களத் தலைமைகளுக்கு மேலாகச் செல்ல முடியாது." – என்றார்.

# ரணில் - சஜித் கூட்டு 99.99 வீதம் உறுதியாம்

## ஐ.தே.க. தலைவர் விரைவில் ஐ.ம.ச. தலைமையகம் வருவாராம்



"ஐக்கிய தேசியக் கட்சி – ஐக்கிய மக்கள் சக்தி இணைந்த கூட்டணியை அமைப்பதற்கான முயற்சிகள் 99.99 சதவீதம் வெற்றியடைந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்துக்குச் செல்வார். அத்தோடு இரு கட்சிகளினதும் செயற்குழுக்களை ஒன்றிணைத்து கூட்டு செயற்குழுக் கூட்டமொன்றை சிறிகொத்தாவில் நடத்த எதிர்பார்த்துள்ளோம். கூட்டணியின் தலைமைத்துவம் தொடர்பில் இரு தலைவர்களுக்கும் இடையிலான தனிப்பட்ட சந்திப்பின் போது தீர்மானிக்கப்படும்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச்செயலாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் கூறுகையில்,

"புதிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தா பெப்ரவரி 4ஆம் திகதி முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட ஒரு தளமாக பரிணமிக்கவுள்ளது. அதற்கான செயற்றிட்டங்கள் நிறைவடைந்துள்ளன.

ஐ.தே.க.வின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்குப் புத்துயிரூட்டும் வகையில் கட்சி மீளக் கட்டியெழுப்பப்படும். ஐக்கிய மக்கள் சக்தியுடனான பேச்சுவார்த்தைகளும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஐ.தே.க. செயற்குழுவில் இதுகுறித்த யோசனைகளை நாம் முன்வைத்துள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தியின் யோசனைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் முழுமையாக நிறைவடைந்த பின்னர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்துக்குச் செல்வார். அத்தோடு இரு கட்சிகளினதும் செயற்குழுக்களை ஒன்றிணைத்துகூட்டுசெயற்குழுகூட்டமொன்றை சிறிகொத்தாவில் நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

எனவே, எம்மில் இருந்து பிரிந்து சென்ற நண்பர்களுடன் மீண்டும் இணைவதற்காக சிறிகொத்தாவைத் தூய்மைப்படுத்தி அழகுபடுத்தியுள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சி – ஐக்கிய மக்கள் சக்தி இணைந்த கூட்டணியை அமைப்பதற்கான முயற்சிகள் 99.99 சதவீதம் வெற்றியடைந்துள்ளது.

கூட்டணியின் தலைமைத்துவம் தொடர்பில் இரு தலைவர்களுக்கும் இடையிலான தனிப்பட்ட சந்திப்பின் போது தீர்மானிக்கப்படும். அண்மையில் முன்னாள் ஜனாதிபதி ரணில், தான் தற்போது செயற்பாட்டு அரசியலில் இல்லை என்று தெரிவித்திருந்தார்.

அந்தவகையில் அவர் ஓர் ஆலோசகராகச் செயற்பட்டு இக்கட்சியை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு வழிநடத்துவார். அது மாத்திரமின்றி இருதரப்பு இணக்கப்பாட்டுடன் தலைமைத்துவக் குழுவொன்றும் நியமிக்கப்படும். எது எவ்வாறிருப்பினும் இரு கட்சிகளும் இணைய வேண்டும் என்பதே தற்போதைய அத்தியாவசிய தேவையாகும். அதற்கமைய நிபந்தனையின்றி நாம் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவோம். அதன் பின்னர் பாரிய பயணமொன்றை ஆரம்பிப்போம்.

நாம் இணைந்தால் அது அரசுக்குப் பாரிய சவாலாகும். ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையும் அதேவேளை, ஏனைய எதிர்க்கட்சிகளையும் இணைத்துக் கொண்டு அரசுக்கு எதிரான பாரிய பலம் மிக்க கூட்டணியொன்றை உருவாக்குவோம். பரந்துபட்ட கூட்டணி எதிரணியை உருவாக்குவதற்கும் ரணில் விக்கிரமசிங்க எமக்கு ஆலோசனைகளை வழங்குவார்." – என்றார்.

# கோர விபத்தில் ஓட்டோ சாரதி பலி!

## இரண்டு பெண்கள் காயம்

காரும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி இடம்பெற கோர விபத்தில் ஓட்டோ சாரதி உயிரிழந்துள்ளார். அத்துடன் ஓட்டோவில் பயணித்த பெண்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம், தம்புத்தேகமை பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவின் சாரதியான தம்புத்தேகமை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது இளைஞரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஓட்டோவில் பயணித்த அதே பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு இளம் பெண்கள் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதியான 71 வயது வயோதிபரைக் கைது செய்துள்ள பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரணில் - சஜித் ஒன்றிணைவதால் எமது ஆட்சிக்குப் பாதிப்பு இல்லை

## அவர்களின் கட்சிகள் 'நாட்டை அழித்த கட்சிகள்' என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கடுமையான விமர்சனம்




"ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் ஓரணியில் இணைவதால் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது." – என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அத்துடன் இரு கட்சிகளின் கடந்த அரசியல் வரலாற்றையும் அவர் விமர்சித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இந்த நாட்டை அழித்த கட்சிகள். இந்த இரண்டு கட்சிகளும் இணைகின்றமையால் – புதிய கூட்டணி அமைகின்றமையால் எமது ஆட்சிக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது.

தேசிய மக்கள் சக்தி அரசு நாட்டின் முன்னேற்றத்துக்காகவும், பொதுமக்களின் நலனுக்காகவும் செயற்படுகின்றது. நாட்டு மக்கள் எம் பக்கமே உள்ளனர்.

எனவே, ரணில் – சஜித் தரப்பினர் சேர்ந்தால் என்ன, சேராவிட்டால் என்ன எமக்கு எந்தப் பாதிப்பும் இல்லை." – என்றார்.




# போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான மகனை வெட்டிப் படுகொலை செய்த தந்தை!

## பொலனறுவையில் சம்பவம்

இளைஞர் ஒருவர் அவரின் தந்தையாரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை, மெதிரிகிரியை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

24 வயதுடைய இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான மேற்படி இளைஞர், தந்தையாருடன் முரண்பட்டு வீட்டில் தொடர்ந்து குழப்பங்களை ஏற்படுத்தி வந்துள்ளார். இது இறுதியில் கொலையில் முடிவடைந்துள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலையாளியான 48 வயது நபரைக் (உயிரிழந்தவரின் தந்தை) கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஏன் இந்த நாடகம்?

நீண்ட காலம் நடத்தப்படாமல் நிலுவையில் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் தேர்தல் ஆணையத்துடன் தொடர்புடைய இருவர் கருத்து தெரிவித்திருக்கின்றனர்.

ஒருவர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க. மற்றவர் எல்லை நிர்ணய குழுவின் செயலாளரும், தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் நாயகமுமான சமன் சிறி ரத்நாயக்க.

“மாகாணசபைத் தேர்தல் முறைமை குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்றத்தால் நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள குழுவில் முன்னிலையாகி எமது தரப்பு யோசனைகளை முன்வைக்கத் தயாராகவுள்ளோம். நடைமுறையில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு கண்டால் மாகாணசபைத் தேர்தல்களை விரைவாக நடத்தும் ஏற்பாடுகளை மேற்கொள்வோம்.” - எனத் தற்போதைய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்திருக்கின்றார்.

எல்லை நிர்ணயம் தொடர்பில் ஆராய்வதற்கு மீண்டும் ஒரு குழுவை நியமித்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதாகிவிடும் என எல்லை நிர்ணய குழுவின் செயலாளர் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் நாயகமான அவருக்கு மாகாண சபை தேர்தல் விடயங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நகர்வுகள் குறித்து நன்கு தெரியும். அதில் பொதிந்திருக்கும் சூத்திரங்கள் அவருக்கு விளங்கும்.

தாங்கள் அதிகாரத்துக்கு வந்தால் ஒரு வருடத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என வாக்குறுதி கொடுத்த தேசிய மக்கள் சக்தி அரசு, நடந்து முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தல்களில் நல்ல பாடங்களைப் படித்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தினால் மாகாண நிர்வாகங்கள் தங்கள் கைகளை விட்டுத் தவறிப் போய்விடும், சரியோ, பிழையோ மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாத சூழ்நிலையில் மாகாண நிர்வாகங்களும் மத்திய அரசை கட்டுப்படுத்தும் தங்களினுடைய முழு கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன, தேர்தலை நடத்தி அவற்றை தங்கள் தரப்பு அல்லாத பிற தரப்புக்களிடம் கையளிக்க ஏன் வாய்ப்பளிக்க வேண்டும் என்பது தேசிய மக்கள் சக்தியின் உள்ளார்ந்தமான அரசியல் கணக்காக உள்ளது.

அதனால்தான் வாக்குறுதி அளித்த மாகாண சபை தேர்தலை தாங்கள் நடத்தாமல் இழுத்தடிப்பதற்கு சட்டச் சிக்கல் என்ற கயிற்றை மக்களுக்கு விழுங்க கொடுக்க முயல்கின்றது அது.

அந்தச் சட்டச் சிக்கல் விவகாரத்தை மக்கள் முன் காட்டுவதற்காகத்தான் இந்தத் தெரிவுக் குழு என்ற ஏற்பாடு. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அறிவித்து, அதன் மூலம் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முறைமை குறித்து ஆராய முற்படுவது என்பது, கடைசியில் மீண்டும் மாகாணங்கள் தோறும் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்யும் அறிவிப்பு வரை வந்து நிற்கும். எல்லை நிர்ணய ஆணைக்குழு என்றும் புதிதாக அறிவிக்கப்படும். அது தனது பணியை ஆரம்பித்து முடிக்க சில வருடங்கள் தேவைப்படும். அந்தக் கணக்கில் இந்த ஆட்சிக் காலம் முடியும் வரை மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் - மாகாண நிர்வாகங்கள் மக்காளால் தெரிவு செய்யப்படும் வெளித் தரப்புகளின் கைகளுக்குப் போகாமல் - தமது கட்டுப்பாட்டில் வைத்து விரும்பியதைச் செய்யலாம் என்பதற்காகத்தான் தேசிய மக்கள் சக்தி, இந்தத் தெரிவுக் குழு என்ற நாடகத்தை முன்னெடுத்திருக்கின்றது. ஆனாலும் மக்கள் விரைவில் இதை முழுமையாக விளங்கிக் கொள்வார்கள் என்று நம்பலாம்.

# ஊழலை ஒழிப்பதில் அநுர அரசு உறுதி; யாராக இருந்தாலும் தப்பவே முடியாது!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் எச்சரிக்கை














**(எஸ்.நிதர்ஷன்)**

“ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தலைமையிலான தற்போதைய அரசை மக்கள் தெரிவு செய்ததற்கான பிரதான காரணமே, இதுவொரு ஊழலற்ற நிர்வாகம் என்பதால்தான். இந்த அரசுக்கு யாருடனும் இரகசியக் கொடுக்கல் வாங்கல்களோ கிடையாது. எனவே, ஊழலை ஒழிப்பதில் அரசு உறுதியாக உள்ளதுடன், தவறிழைப்பவர்களுக்கு எதிராகத் தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்கும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஏற்பாட்டில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேசிய விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தின் முதலாவது நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை கைதடியிலுள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

‘நேர்மையான தேசத்தை நோக்கி’ எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

“மக்கள் நம்பிக்கை வைக்கும் அரச சேவையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். அரச சேவையில் வெளிப்படைத் தன்மை இருந்தால் மாத்திரமே மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியும். எங்கள் கரங்கள் எப்போதும் தூய்மையானவையாக இருக்க வேண்டும். எதையும் எதிர்பார்த்து எங்கள் சேவைகள் அமையக் கூடாது. நேர்மையின்றிய தொழிற்பாடு சேவையாகக் கருதப்படாது.

மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் மற்றும் வியாபார நடவடிக்கைகளுடன் பின்னிப் பிணைந்த அரச நிர்வாகக் கட்டமைப்பு உள்ளூராட்சி மன்றங்களாகும். எனவே, இப்பிரதிநிதிகளுக்கு இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான தெளிவான அறிவு அவசியம். சில சந்தர்ப்பங்களில் ‘அன்பளிப்பு’ என்ற பெயரில் வழங்கப்படும் பொருட்கள் கூட இலஞ்சமாகவே கருதப்படும் என்பதைப் பிரதிநிதிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

கட்டட அனுமதி, வியாபார அனுமதி, சோலை வரி மாற்றம் உள்ளிட்ட சேவைகளை உடனடியாகச் செய்து கொடுக்க முடியும். ஆனால், சில இடங்களில் இவை வேண்டுமென்றே தாமதப்படுத்தப்படுகின்றன. இத்தகைய இழுத்தடிப்புக்கள் இலஞ்சம் பெற்றுக்கொள்ளும் நோக்

தொடர்ச்சி ▼

# ஊழலை ஒழிப்பதில் அநுர அரசு உறுதி; யாராக இருந்தாலும் தப்பவே முடியாது!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் எச்சரிக்கை

தொடர்ச்சி ▲

கில் செய்யப்படுவதாகவே கருதப்படும். இவ்வாறான செயற்பாடுகளுக்குத் தற்போதைய நிர்வாகத்தில் இடமில்லை.

கடந்த காலங்களில் அரசியல் தலைமைத்துவங்களால் பிழையானவற்றைச் செய்வதற்கு நீங்கள் தூண்டப்பட்டிருக்கலாம். ஆனால் தற்போதைய அரசின் காலத்தில் அவ்வாறான எந்தவொரு விடயங்களும் நடைபெறப்போவதில்லை. எனவே, உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பான, நேர்மையான சேவையை வழங்க வேண்டும்." – என்றார்.

வடக்கு மாகாணத்தில் மூன்று நாட்கள் முன்னெடுக்கப்படவுள்ள இந்தச் செயற்றிட்டத்தின் முதல் நாளான இன்று, யாழ். மாநகர சபை மற்றும் யாழ். மாவட்டத்தின் 7 பிரதேச சபைகளின் (வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு, காரைநகர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வேலணை) தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) எஸ்.எம்.சப்ரி தொடக்கவுரையாற்றினார். வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.சுதர்சன் வரவேற்புரையாற்றினார்.

வளவாளர்களாகக் கலந்துகொண்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஆணையாளர் ஜனாதிபதி சட்டத்தரணி செத்திய குணசேகர மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன் ஆகியோர், 'ஊழலற்ற உள்ளூராட்சி மன்றங்களைக் கட்டியெழுப்புதல்', 'ஊழலை எதிர்ப்பதில் உள்ளூராட்சிப் பிரதிநிதிகளின் பங்கு' மற்றும் 'சட்டப் பின்னணி' ஆகிய தலைப்புகளில் விரிவுரையாற்றினர்.

சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் – வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி நகர சபைகள் மற்றும் யாழ். மாவட்டத்தின் ஏனைய பிரதேச சபைகளுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச சபைகளின் பிரதிநிதிகளுக்கான செயலமர்வு நாளை செவ்வாய்கிழமை நடைபெறும்.

வவுனியா மாநகர சபை மண்டபத்தில் – வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கான செயலமர்வு நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறும்.












## நிர்வாக விடயங்களில் தலையீடு செய்யும் ரஜீவன் எம்.பி.

# வடமராட்சி கிழக்கு போக்குவரத்து விடயத்தில் எந்தவிதமான அக்கறையும் காட்டாதமை ஏன்?

**(மரியசீலன் திலைக்ஸ் - வடமராட்சி நிருபர்)**

பருத்தித்துறை நகரசபை நிர்வாக விடயங்களில் தலையீடு செய்யும் ரஜீவன் எம்.பி. வடமராட்சி கிழக்கு போக்குவரத்தில் அக்கறை காட்டாதது ஏன் என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு போக்குவரத்து சீரின்மை காரணமாக பலரும் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அண்மையில் அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் மருதங்கேணிவரை நடந்து சென்றுள்ளனர்.

பருத்தித்துறை கேவில் வரை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள் எந்தவித பொறுப்புணர்வுமின்றி தாம் நினைத்த நேரத்துக்குப் புறப்படுவதும், சென்றடைவதாலும் மாணவர்கள் ஊழியர்கள், பயணிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர். குறிப்பாக கட்டைக்காட்டில் இருந்து பருத்தித்துறைவரை பாடசாலை சேவைக்காக ஈடுபடும் அரச பஸ்கள் வடமராட்சியின் பிரபல பாடசாலைகளை சென்றடைய காலை 7:50 ஆகுகின்றது. இதனால் நாளாந்தம் அரைமணி நேரம் மாணவர்கள் தினமும் நேரம் தாமதித்து செல்வதுடன் மந்திகை மருத்துவமனை உட்பட பல அரச ஊழியர் கள் தமது கடமைக்கு நேரத்துக்குச் செல்ல முடியாமல் தினமும் பாதிப்படைகின்றனர்.

இதேவேளை பருத்தித்துறையில் இருந்து கேவில்வரை நீண்ட நேர இடைவெளிக்கொரு பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன.

குறிப்பாக பருத்தித்துறை கேவில் பஸ் சேவை பிற்பகல் 2:15 மணிக்கும் பின்னர் 6:20 மணிக்குமே பருத்தித்துறையில் இருந்து கேவிலுக்கான சேவையில் ஈடுபடுகின்றது.

இதனால் பல மாணவர்கள் பலமணி நேரமாக வீதிகளில் காத்திருக்கின்றனர். பருத்தித்துறை வவுனியா பஸ் சேவை, இரவு 8:30 மணிக்கு இடம்பெறும். பருத்தித்துறை மருதங்கேணி ஊடான கொழும்பு பஸ் சேவை என்பனவும் 5 வருடங்களாக நிறுத்தபட்டுள்ளது. பருத்தித்துறை கேவில் பஸ் சேவை கேவிலுக்கு செல்லாது கட்டைக்காடு கிராமத்துடன் நிறுத்தப்படுவதால் 5 கிலோ மீற்றர் தூரம்வரை கேவிலுக்கு மாணவர்கள் உட்பட பயணிகள் இரவிரவாக நடந்து செல்கின்றனர். வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் பெரிய பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்து மாறு ஒருங்கிணைப்பு குழு தலைவரால் இலங்கை போக்குவரத்து சபை சாலை முகாமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டும் சிறிய பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன.

இதேவேளை, தனியார் பஸ் சேவைகள் எந்தவித பொறுப்புணர்வுமின்றி தாம் நினைத்த நேரம் சேவையில் ஈடுபடுவதும், நினைத்த நேரம் சேவையை நிறுத்துவதும் வழமையாகவுள்ளது. தனியார் பஸ் சேவை வழங்குனர்கள் தமக்கு உரிய வருமானம் இன்மையைக் காரணம் காட்டி சேவையை இடைநடுவில் நிறுத்துகின்றனர். அவர்களைக் காட்டுப்படுத்தும் தனியார் போக்குவரத்து அதிகார சபையிடம் முறைப்பாடு செய்தும் அவர்களும் கண்டுகொள்ளாமல் உள்ளனர்.

நாகர் கோவில் பருத்தித்துறை தனியார் பஸ்சேவை குறித்த சேவை வழங்குனரால் பல வருடங்களாக நிறுத்தபட்டுள்ளது.

இந்த நிலையில் ஒருங்கிணைப்பு தலைவராக இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# பஸ்ஸின் பிரேக் செயலிழந்தமையால் மண் மேட்டில் மோதி நிறுத்திய சாரதி

## கினிகத்தனை கடவல பகுதியில் விடிகாலை சம்பவம்

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

தலவாக்கலையில் இருந்து கொழும்பு நோக்கிச்சென்ற-இலங்கைஅரசபோக்குவரத்து சபையின் கடவத்த டிப்போ பஸ் ஒன்று திடீரென பிரேக்குகளின் கட்டுப்பாட்டை இழந்ததால், ஓட்டுநர் ஒரு மண் மேட்டில் பஸ்ஸை மோதி அதை நிறுத்தினார் என கினிகத்தனை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் - கொழும்பு பிரதான சாலையில் உள்ள கினிகத்தனை கடவல பகுதியில் உள்ள மஹா வாங்குவா பகுதியில் இன்று விடிகாலை 5:30 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்தது.



பஸ் வளைவில் செல்ல முயன்ற போது, பஸ்ஸைக் கட்டுப்படுத்த இரண்டாவது கியருக்கு மாற்றினார் எனவும், அந்த நேரத்தில் பஸ்ஸின் பிரேக்கிங் சிஸ்டம் செயலிழந்ததால், கியர்களைப் பயன்படுத்தி ஒரு சாய்வான பகுதியில் உள்ள ஒரு மலையில் பஸ்ஸை சாதுரியமாக நிறுத்தினார் எனவும் ஓட்டுநரான மகேஷ் சுதர்சன் (வயது 49) தெரிவித்தார்.

விபத்து நடந்த நேரத்தில் பஸ்ஸில் சுமார் 80 பயணிகள் இருந்தனர். பின்னர் பஸ் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் அந்தப் பயணிகளை வேறொரு பஸ்ஸில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தனர்.

விபத்து குறித்து கினிக்கத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பணிப்பின் பேரில் முழுமையான விசாரணை-யை கினிக்கத்தனை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.




# புதுக்குடியிருப்பில் இளைஞனைக் காணோம்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என அவரது உறவினர்கள் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் அது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரம் பகுதியில் வசித்து வரும் 24 வயதுடைய பாலசுப்பிரமணியம் சாம்சன் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் இரவு சுமார் 7மணியளவில், இந்த இளைஞரின் வீட்டிற்கு வந்த நபர் ஒருவர் வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் இளைஞனை ஏற்றிச் சென்றார் எனவும், அதன் பின்னர் அவர் தொடர்பில் எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றும், இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் அவரது உறவினர்களால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.






இந்த முறைப்பாட்டையடுத்து சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இளைஞன் தொடர்பான தகவல்கள் யாருக்காவது தெரிந்திருந்தால், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது 0701316536 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தருமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

இளைஞன் காணாமல் போன சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் காணாமல் போன இளைஞனின் வீட்டிற்கு அருகாமையில் விடியல் விளையாட்டு மைதானத்தில் உள்ள கிணற்றுக் கட்டில் அந்த இளைஞனின் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டது. கிணற்றுக்குள் அந்த இளைஞனுடையது என்று கருதப்படும் காலணி ஒன்று காணப்படுகின்றது. சம்பவம் தொடர்பான மேலதிக தேடுதல், விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.













# பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்ட வரைவு மிக அதிகம் ஆபத்தானது என்கின்றார் அம்பிகா

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்குப் ( PTA) பதிலாகக் கொண்டுவரப்பட உள்ள "அரசைப் பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாக்கும் சட்ட வரைவு" (PSTA) தொடர்ந்தும் பாதுகாப்பு துறையினருக்கு அதீத அதிகாரங்களை வழங்கும் ஒன்றாகக் காணப்படுவதாக இலங்கையின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு தொடர்பாக சிவில் அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் தூதரக அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 1979 ஆம் ஆண்டு தற்காலிகமான ஏற்பாடு எனக்கூறி கொண்டுவரப்பட்டாலும், 1982 இல் அது நிரந்தரமாக்கப்பட்டு, இன்று வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

பயங்கரவாதம் என்றால் என்ன என்பது தொடர்பில் சரியான வரவிலக்கணம் தெரியாத ஒரு சட்டமாக - பாதுகாப்பு துறையினர் தாங்கள் விரும்பிய அர்த்தத்தில் வழக்குத் தாக்கல் செய்கின்ற ஒரு சட்டமாக - பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக இந்தச் சட்டம் வடக்கு, கிழக்கு பகுதிகளில் பிரயோகிக்கப்பட்டாலும், கொழும்பில் இடம்பெற்ற அறகலயவை அடக்குவதற்காக கடந்த அரசாங்கத்தில் பலர் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள்.

அப்போதுதான் இந்தச் சட்டத்தின் ஆபத்து தொடர்பில் தெற்கில் உள்ளவர்கள் உணரக்கூடியதான சூழ்நிலை உருவாகியது.

தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கம் தன்னிடம் ஆட்சி அதிகாரம் இல்லாத நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவோம் என்ற உத்தரவாதத்தை வழங்கி ஒரு வருடம் கடந்த நிலையிலும் நீக்கப்படவில்லை.

தற்போது சில திருத்தங்களை மட்டும் மேற்கொண்டு அரசைப் பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாக்கும் சட்டம் என்ற பெயருடன் ஒரு வரைவைத் தயாரித்து முடித்திருக்கிறார்கள்.

தற்போது பயன்பாட்டில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்களை அடக்கும் ஒரு சட்டமாக செயற்பட்டு வந்திருக்கின்ற நிலையில் தற்போது புதிய வரைவும் அதே செயற்பாட்டை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்டமை ஆபத்தான விடயம்.

தற்போதுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை பார்த்தால் இந்தச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட நபர்கள் அநேகமானவர்களிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் இலங்கைச் சிறைகளில் சித்திரவதை செய்யப்பட்டு பெறப்பட்டுள்ளன.

உதாரணமாக கூறினால் 18 வருடங்கள் சிறையில் இருந்த சந்திர போஸ் என்ற நபர் தன்னை சிறையில் சித்திரவதை செய்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள் என 2021 ஆம் ஆண்டு மேன்முறையீடு செய்த நிலையில் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.

அவரின் உடல் பகுதிகளில் அனேகமான இடங்களில் தழும்புகள் காணப்பட்டமை சிறையில் சித்திரவதை செய்யப்பட்டதைக் காட்டுவதாக அமைந்தது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்(PTA), பின்னர் 2018 இல் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (CTA), பின்பு பயங்கரவாத விரோதச் சட்டம் (ATA) என்றெல்லாம் வரைவுகள் கொண்டுவரப்பட்டு எதிர்ப்புகள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக கைவிடப்பட்ட நிலையில் தற்போது அரசை பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாக்கும் சட்டம் ீ(ளுவயு) என்ற பெயருடன் சட்ட வரைவு தயார் செய்யப்பட்டுள்ளது.

2018 ல் கொண்டுவரப்பட்ட வரைவில் நீதித்துறையைபலவீனப்படுத்திபொலிஸாரின் அதிகாரங்களை உயர்த்துவதான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

அதேபோன்று தற்போது தயாரிக்கப்பட்ட புதிய சட்ட விரைவில் தடை செய்யப்படும் ஓர் இடத்தினை அழிக்கும் அதிகாரம் ஜனாதிபதியைத் தாண்டி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படுகிறது.

இந்த புதிய சட்ட விரைவில் ஒரு மனிதனுடைய நடமாடம் சுதந்திரத்தை பொலிஸார் தீர்மானிக்க இடமளிப்பது மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் செயல்பாடுகளை தடுப்பதற்கான ஓர் உத்தியாகும்.

அதேபோன்று பயங்கரவாதம் என்ற சொல் வரையறுக்கப்படாத நிலையில் குற்றம் ஒன்றை ஒருவர் செய்யப் பார்க்கிறார் என்ற காரணத்தின் அடிப்படையில் அவரைக் கைது செய்யும் அதிகாரம் பாதுகாப்பு தரப்பினருக்கு வழங்கப்படுகிறது.

கைது செய்யும் அதிகாரம் புதிய சட்டத்திலும் ஆயுதம் தாங்கிய படைகளிடம் காணப்படுகின்ற நிலையில் 24 மணித்தியாலங்கள் வரை அவருக்குரிய பாதுகாப்புகள் தொடர்பில் சந்தேகங்கள் எழுவதாக அமைகிறது.

ஏனெனில் ஆயுதப் படைகளால் கைது செய்யப்படும் நபர் ஒருவரை 24 மணித்தியாலத்திற்கு முன்னர் பொலிஸ் நிலையம் ஒன்றில் ஒப்படைக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

புதிய சட்ட வரைவில் ஏற்கனவே தடுத்து வைக்கும் அதிகாரத்தை நீதித்துறையில் இருந்து நிர்வாகத்துறை தீர்மானித்த நிலையில் சிறு திருத்தமாக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாவிட்டால் பிணையில் விடுவிக்கலாம் என்ற ஒரு விடயத்தை சேர்த்திருக்கிறார்கள்.

அதேபோன்று குற்றம் ஒப்புதல் வாக்குமூலத்தை பொலிஸார் தாங்கள் நினைத்தவாறு எழுதி வாங்கும் நிலையை மாற்றி நீதிமன்றத்தின் முன் வரவேண்டும், வீடியோ பதிவு மேற்கொள்ளப்பட வேண்டுமென கூறப்படுகிறது.

இது எவ்வாறாக இருந்தாலும், புதிய சட்டத்தில் நீதிமன்றம் பிணை வழங்க முடியுமே அல்லாமல் அவரை வழக்கிலிருந்து விடுவிப்பதற்கான அதிகாரம் அற்ற நீதித்துறையாகவே காணப்படுகிறது.

ஆகவே பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் புதிய சட்ட வரைவும் அடிப்படை உரிமை மீறல்களை புரிவதற்கான ஒரு வரைவாகவே காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், அமெரிக்கா, சுவிஸ் , ஆஸ்திரேலியா மற்றும் ஐ.நாவை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.







# ஒரின்ஸ்டோ கல்வி நிறுவனத்தின் முதல் பொதுப் பட்டமளிப்பு விழா

ஒரின்ஸ்டோ கல்வி நிறுவனத்தின் முதலாவது வருடாந்த பொதுப் பட்டமளிப்பு விழா, அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், அதன் பணிப்பாளர் எம். ஆர். எம். ரிஷாத் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உளவியல் மற்றும் ஆலோசனை வழிகாட்டல், மனித வள முகாமைத்துவம், வணிக மேலாண்மை, கிராபிக்ஸ் வடிவமைப்பு உள்ளிட்ட கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக, இலங்கை பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் எம்.ஐ.எம்.மவ்ஜூத் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக மெர்சி லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம்.முனாஸ் நளீமி மற்றும் ஒரின்ஸ்டோ கல்வி நிறுவனத்தின் கல்வித் துறைத் தலைவரும், வணிகப் பயிற்றுநரும், மேலாண்மை ஆலோசகருமான பேராசிரியர் முஹம்மத் பஹ்மி பாரூக் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அத்தோடு நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் அதிக எண்ணிக்கையானோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.




தென்மராட்சி
சிவபூமி பாடசாலை
(வேலாயுதம் வீதி, சாவகச்சேரி)

திறப்பு விழா

காலம்
28.01.2026 புதன்கிழமை காலை 9.30 மணி

இடம்
"தங்கவாசம்", வேலாயுதம் வீதி, சாவகச்சேரி

தலைவர்
கலாநிதி ஆறு. திருமுருகன்
(தலைவர்–சிவபூமி அறக்கட்டளை இலங்கை)

அன்புடையீர்,
வணக்கம்
இறையருளாலும், உங்கள் அனைவரினதும் பேருதவிகளாலும் கடந்த 25 ஆண்டுகளாக எமது அறக்கட்டளையின் அறப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பிறப்பிலேயே மனவளர்ச்சி குறைந்த விசேட தேவையுடைய மாணவர்களுக்காக 2003இல் கோண்டாவிலிலும், 2016இல் கிளிநொச்சியிலும் எமது அறக்கட்டளையால் உருவாக்கப்பட்ட பாடசாலைகள் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. இந்நிலையில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டனில் வசிப்பவர்களுமாகிய வைத்திய கலாநிதி கனகசபை கதிர்காமநாதன் இரட்ணேஸ்வரி தம்பதிகள் மனமுவந்து வழங்கிய இல்லத்தைப் புனரமைத்து இப்பாடசாலை ஆரம்பிக்கப்படுகிறது. பெரிய பரப்பளவு கொண்ட தென்மராட்சித் திருநகரில் மாற்றுவலுவுடைய குழந்தைகளை மகிழ்வாய் வாழ வைக்க இறையருளை வேண்டி உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

சிவபூமி அறக்கட்டளை, இலங்கை

நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்
பாடசாலையைத் திறந்து வைத்தல்
இறைவழிபாடு

வரவேற்புரை
திரு. சி. குணசீலன்
(இளைப்பாறிய விரிவுரையாளர்)
(நிர்வாக சபை உறுப்பினர் – சிவபூமி அறக்கட்டளை)

ஆசியுரை
கலாநிதி சிவஸ்ரீ து. கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
(ஆலய பிரதம குரு –சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்)

தலைமையுரை

பிரதம விருந்தினர்
பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்.
(முன்னாள் துணைவேந்தர் –யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்
திரு. F.C.சத்தியசோதி
(பிரதேச செயலாளர் –சாவகச்சேரி)

கௌரவ விருந்தினர்
வைத்தியகலாநிதி. கமலா அருணாசலம்
(தலைவர் – கேன் புற்றுநோய்காப்பகம் ,இங்கிலாந்து)

திரு. வ. சிறிபிரகாஸ்
(தவிசாளர்– நகரசபை, சாவகச்சேரி)

சிவபூமிப் பாடசாலை
மாணவர்களின் கலைநிகழ்வு

நன்றியுரை

மதிய விருந்து

அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்

நிர்வாக சபை –சிவபூமி அறக்கட்டளை

Google Map Point
Head Office - Sivapoomi Trust, Kondavil East, Kondavil ,Jaffna, Sri Lanka
T.P - 021-222-7938 WWW.Sivapoomi.Com Sivapoomi@Gmail.com

# முல்லைத்தீவில் 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு




**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வே.கரிகாலனின் ஒழுங்குபடுத்தலில், சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பு ஐக்கிய ராட்சியம் நிதிப்பங்களிப்புடன் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 50 மாணவர்களுக்கும், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 100 மாணவர்கள் என மொத்தம் 150 மாணவர்களுக்கு துணுக்காய் வர்த்தக சங்க மண்டபத்திலும், மாந்தை கிழக்கு பிரதேசசபை மண்டபத்திலும் வைத்துக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் வே.கரிகாலன், துணுக்காய் பிரதேச சபை தவிசாளர் த.செந்தூரன், மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி இ.நளினி, பிரதேச சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மற்றும் மகளிர் அணி இணைப்பாளர் திருமதி தீ.அனஸ்ரியா, கிராம மட்ட அமைப்பினர்கள், பொது மக்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



நா.உசாந்தினி,
3ஆம் வருடம்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள தெரு நாய்கள்...!

இன்று உலகமயமாதலின் தாக்கமானது வாழ்க்கை முறை, உணவு, பழக்க வழக்கம், ஆடை, கலாசாரம் மட்டுமல்ல செல்லப்பிராணி தேர்வு கூட மாறிவிட்டது. இன்று இத்தாக்கமே தெரு நாய் அதிகரிப்புக்குக் காரணமாக அமைகின்றன. ஆரம்ப காலத்தில் அலைந்து திரிந்து வாழ்க்கையை நடத்திய மனிதன் அன்று தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக நாய்களை தம்முடன் வளர்த்துக் கொண்டான். பின்னர் கைத்தொழில் புரட்சியில் ஏற்பட்ட மாற்றம் மக்கள் நிரந்தரக் குடியிருப்புகளை அமைத்து வாழத் தலைப்பட்டனர். இவ்வாறு கொண்டுவரப்பட்டு வளர்க்கப்பட்ட காவலர்கள்தான் வெளிநாட்டு நாய்களின் மோகத்தால் தெருவில் விடப்படுகின்றன.

இந்த நிலைமை யாழ்ப்பாணத்தில் அதிகரித்து இருப்பதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இன்று மக்களின் மனதில் இருக்கும் நாய் எதுவென்று கேள்வியை தொடுக்கின்ற போது Pomeranian, German shepherd, Rottweiler, labrader, concter spaniel என்ற பெயர்களே புன்னகையுடன் வருகின்றன. அப்போ இவ்வளவு காலம் வளர்த்த நாய்கள் எங்கே? அவைகளா தெருநாய்கள்?

யாழ்ப்பாணத்தில் வீதியோரங்களினை பார்க்கின்ற போது ரோட்டில் நாய்கள் வண்ணமாக காணப்படுகின்றன. உறங்க இடமின்றி, உண்ண உணவின்றி, மக்களிடம் கல்லடி வாங்கியும் திரிகின்றன. இந்த நிலைமைக்கு காரணம் என்ன என்று நோக்கும் போது வெளிநாட்டு நாய்களில் காணப்படும் கவர்ச்சி பாரம்பரிய காவலர்களிடமில்லை என்பதால் அவற்றைத் தெருவில் விடும் சமூகமாக மாறிவருகின்றது.

பெண் நாய்கள் வருடத்துக்கு இருமுறை குட்டி போடுகின்றன. இதனால் இனத்தின் பெருக்கம் அதிகரிக்கிறது. பாரம்பரிய நாய்களை யாரிடமும் விற்க முடியாது. ஆனால் வெளிநாட்டு நாய்களின் குட்டிகளை விற்க முடியும் என்பதால் பணத்தின் மீது உள்ள மோகத்தாலும் இன்று அதிகமான மக்கள் வெளிநாட்டு நாய்களை விரும்புகிறார்கள்.

இவ்வாறு வெளிநாட்டு நாய்களை மக்கள் விரும்பும் போது சில சவால்களை எதிர்கொள்ளுகிறார்கள். அதாவது செலவு அதிகரிப்பு ஏற்படுகிறது. உள்ளூர் நாய்கள் அன்றாட வாழ்வில் கிடைக்கும் உணவைச் சாப்பிட்டு விட்டு எளிமையான ஒரு தரையில் படுத்து எழும்புகின்றன.

தொடர்ச்சி ▼



# யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள தெரு நாய்கள்...!

தொடர்ச்சி▲

ஆனால் வெளிநாட்டு இன நாய்களுக்கு இறைச்சி, மீன் இல்லை என்றால் அதற்கு அன்று சாப்பாடும் இல்லை என்ற அளவுக்க இருக்கின்றன. மேலும் அதனுடைய உடல் ஆரோக்கியத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு பல்வேறு தடுப்பூசி சிகிச்சை அளிக்க வேண்டிய தேவை காணப்படுவதால் உயர்ந்த செலவுகள் காணப்படுகிறது.

மக்களால் கைவிடப்பட்ட நாய்கள் தெருவோரங்களில் அதிகரிக்கின்ற போது வீதி விபத்துக்கள் அதிகரிக்கிறது. குறிப்பாக வீதிகளின் ஓரங்களில் படுத்திருக்கும், ஆனால் திடீரென்று வாகனங்களுக்குள்ளே செல்வதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனால் மனிதன் காயமடைந்து இறக்கின்ற நிலையும் ஏற்படுகிறது. இல்லையென்றால் நாய் காயமடைந்து இறக்கின்றது. இதிலும் மனிதன் பாதிக்கப்படும் போது வைத்தியசாலை கொண்டு செல்கிறார்கள் ஆனால் நாய் பாதிக்கப்படுகின்ற போது திரும்பி கூட பார்க்காத சமூகமாக காணப்படுகிறது. அதிலும் ஒரு நாய் விபத்தில் அடிபட்டு இறந்து விட்டால் கூட அதனை அங்கிருந்து அகற்றிவிட முடியாத அளவு வேலைப்பளு நிறைந்த சமூகமாக இன்றைய சமூகம் மாறிவிட்டது. ஆனால் நகரை அண்டிய பகுதிகளில் நகர சபை சிறிதளவு கவனத்தில் கொண்டாலும் ஏனைய பகுதிகளில் எலும்புகள் கூட உக்கும் வரை அவ்வாறே கிடக்கின்றது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

தெருநாய்கள் மனிதர்களை கடிக்கின்றன. இவை ஒழுங்காக வளர்க்கப்படாமையால் ஊசிகள் போடப்பட்டிருக்காது. இதனால் அவை கடிக்கின்றன போது அதனை கவனிக்காது விடுகின்ற போது மரணங்கள் ஏற்படும். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நாய் கடித்து ரேபிஸ் நோய் தொற்றுக்கு உள்ளாகி 5 மரணங்கள் 2025 இல் மாத்திரம் நிகழ்ந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் தெருநாய்களை பாதுகாப்பதற்காக சில காப்பகங்கள் செயற்பட்டு வருகின்றன உதாரணமாக araly dog care, momma tomma dog care போன்றவற்றைக் குறிப்பிட்டு சொல்ல முடியும்.

இவர்கள் தெருவோரங்களில் காணப்படுகின்ற நாய்களை எடுத்து வந்து உணவு கொடுத்து அதற்கான பாதுகாப்பைக் கொடுக்கிறார்கள் இருந்த போதிலும் ஓரளவு மாத்திரமே தடுக்க முடிகின்றது.

இவ் அதிகரிப்பைத் தடுப்பதற்கு அரசின் பங்களிப்பு என்று நோக்குகின்ற போது தடுப்பூசி மற்றும் கருத்தடை சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர் அதாவது தெரு நாய்களுக்கு தடுப்பூசி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செயல்படுத்தல். குறிப்பாக அதனை ஒரு கிழமைக்கு முன்னர் பத்திரிகையின் ஊடக தகவலை வழங்குகிறார்கள். பின்னர் நிகழ்ச்சி திட்டத்துக்கு முதல் நாள் ஒலிபெருக்கியின் வாயிலாக தகவல்களை அப் பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு வழங்கி, அடுத்த நாள் அதற்கான செயல் திட்டத்தினை முன்னெடுப்பார்கள்

இதற்காக தெரு நாய்களைப் பிடிப்பதற்காக மற்றும் எவ்வாறான முறையில் அணுக வேண்டும் என்று ஒரு பயிற்சி வைக்கப்பட்ட குழு இங்கு காணப்படுகிறது. இந்த செயல் திட்டத்தைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மேற்கொள்ளும். மேலும் யாழ்ப்பாணத்தில் 13 சுகாதார சேவைகள் பணிமனைகள் காணப்படுகின்றன. இதன் மூலம் இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வடமாகாணத்தில் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவதற்கு சுமார் 5 ஆயிரம் பெண் நாய்களுக்கு கருத்தடை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வட மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். வசீகரன் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட செயலகத்தில் 13.11.2025 அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற மாவட்ட விவசாய மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலில் விவசாய நிலங்களுக்குள் செல்லும் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில் இவ்வாறு தெரிவித்தார்.

அநேகமான பிரதேச சபைகள் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்காக பெண் நாய்களுக்கான கருத்தடைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன் அடிப்படையில் வடமாகாணத்தில் சுமார் 5 ஆயிரம் நாய்களுக்கான கருத்தடை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் சுமார் 3 ஆயிரத்து 500 பெண் நாய்களுக்கான கருத்தடைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசு என்னதான் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அதில் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் இவ்வாறு எவ்வளவு சலுகைகள் இருந்தாலும் எங்களுடைய பாரம்பரிய நாய்களை தெருவில் விட்டு இன்னொரு கவர்ச்சியை நோக்கி செல்லுகிறோம் நாம்.



# மட்டு. ஆறுமுகத்தான் குடியிருப்பில் கலாசார போட்டியும் தைப்பொங்கலும்

(பழுவூரான்)

சிவதொண்டர் திருக்கூட்டத்தின் ஏற்பாட்டில் 2 ஆவது வருடமாக ஆறுமுகத்தான் குடியிருப்பு மாவடிப்பிள்ளையார் ஆலயம், வாணி அறநெறிப் பாடசாலை மற்றும் நடராஜர் சைவசித்தாந்த பயிற்சி மையம் ஆகியன இணைந்து நடத்திய தைப்பொங்கல் விழாவும், கலாசாரப் போட்டி நிகழ்வும் ஆறுமுகத்தான் குடியிருப்பு மாவடிப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

இதன்போது அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்காக கோலம் போடுதல், பூமாலை கட்டுதல், தோரணம் கட்டுதல் ஆகிய போட்டிகள் நடாத்தப்பட்டது.

இந்தப் போட்டிகளில் பங்குகொள்வதற்காக 25 இற்கும் மேற்பட்ட அறநெறிப் பாடசாலைகளில் இருந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

ஆறுமுகத்தான் குடியிருப்பு மாவடிப்பிள்ளையார் ஆலயத்தின் தலைவர் திரு.வி.வினோத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகம், சிவதொண்டர் திருக்கூட்டத்தின் தலைவர் சிவதொண்டன் தி.கே.கமல்ராஜ், இணைப்பாளர் சிவதொண்டன் எஸ்.சுதர்சன், மட்டக்களப்பு மாவட்ட இந்து மகளிர் மன்றத்தின் தலைவி திருமதி உ.காயத்ரி மற்றும் உறுப்பினர்களான சைவப்புலவர் திருமதி இ.விஜயலட்சுமி, சைவப்புலவர் திருமதி த.மனோன்மணி, சைவப்புலவர் திருமதி சுந்தரமதி வேதநாயகம், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு சிவதொண்டர் திருக்கூட்டத்தின் 358 ஆவது நிகழ்வென்பது குறிப்பிடத்தக்கது.










# மாணவருக்கான இளம் விஞ்ஞானிகள் ஆய்வு உவர்மலை விவேகானந்தா மாணவி முதலிடம்!

(எஸ்.கீதபொன்கலன்)

மத்திய கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட உயர்தர மாணவர்களுக்கான இளம் விஞ்ஞானிகள் - 2024-2025 ஆய்வுப் போட்டியில் திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் 2026 உயிரியல் பிரிவு மாணவி கே.டிஷாலினி தேசிய ரீதியில் முதலிடம் பெற்றார்.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் தமிழ் மாணவர் ஒருவர் முதலிடம் பெற்றது இதுவே முதல் முறையாகும்.

இந்தத் தேசிய மட்டப்போட்டியில் இரண்டாம் இடத்தை கண்டி பெண்கள் உயர் பாடசாலையின் கவீஷா ராஜபக்ஸவும், மூன்றாம் இடத்தை கண்டி தர்மராஜ கல்லூரியின் ஒசாதா தலைமையிலான மாணவர்கள் குழுவினரும் பெற்றுள்ளனர்.

கல்வி அமைச்சால் அரச பாடசாலைகளிடையே தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட இளம் விஞ்ஞானிகள் ஆய்வுப் போட்டி - 2024ஃ2025 இல் திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி மாணவர்கள் போட்டியிட்டிருந்தார்கள்.

மாகாண மட்டத்தில் 06 சிறந்த ஆய்வுகள் தேசியப் போட்டிகளுக்காக தெரிவுசெய்யப்பட்டன. அதில் உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி 1ஆம், 2ஆம், 4ஆம் இடங்களை பெற்று 03 இடங்களைத் தட்டிக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து, தேசிய ரீதியில்



நடைபெற்ற போட்டியில், இலங்கை முழுவதிலும் இருந்து 42 மிகச்சிறந்த ஆய்வுகள் தெரிவு செய்யப்பட்டன. அவற்றில் உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் மூன்று ஆய்வுகளும் சிறந்த ஆய்வுகளாக தெரிவுசெய்யப்பட்டிருந்தன. அவற்றில் 1 ஆம், 3 ஆம், 5 ஆம் ஆகிய 3 இடங்களைப் பெற்று தேசிய ரீதியில் உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி சாதனை படைத்துள்ளது.

இந்த இளம் விஞ்ஞானிகளின் அடைவானது, அவர்களினுடைய பல்கலைக்கழக நுழைவில் மேலும் சாதகத் தன்மையை அதிகரித்து சட் ஸ்கோர் இல் ஒருபடி முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளமை கவனத்தில் கொள்ள தக்க விடயமாகும்.

தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மாணவி செல்வி கே.டிஷாலினி "வயல் நிலங்களில் வாழும் மண்புழுவின் மீது யூரியா உரத்தின் தாக்கம்" என்பது பற்றி ஆய்வு மேற்கொண்டிருந்தார்.

இந்த இளம் விஞ்ஞானி இவ் ஆய்வினூடாக, வயல் நிலத்தில் மண் புழுக்களைத் தக்க வைக்கக்கூடிய யூரியா பிரயோக அளவையும் கண்டறிந்து அதனையும் தமது ஆய்வு அறிக்கையில் பிரேரித்திருந்தார்.

இதேவேளை தேசிய ரீதியில் 5 ஆம் இடத்தையும் இதே கல்லூரியின் இளம் விஞ்ஞானிகள் குழுவாக பெற்றுக் கொண்டுள்ளனர். இக்குழுவில்,

ஏ.கௌசல்யா, யே. நிவேதா, எஸ். விதர்பா, ரீ.பிரதாப் ஆகிய இளம் விஞ்ஞானிகள் பங்குபற்றி ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் தமது ஆய்வினூடாக "கற்றாழை பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான மண்வகையை" ஒப்பிட்டுக் கண்டறிந்திருந்தார்கள்.

அத்தோடு, தேசிய ரீதியில் 35 ஆவது இடத்தையும் இதே கல்லூரியின் மாணவர் குழு ஒன்று தட்டிக்கொண்டது. இக்குழுவில் ரீ.கீர்த்திகன், எஸ்.கிர்த்திக், ஏ.மௌரேசனன், எஸ்.நித்தீஸ் ஆகிய இளம் விஞ்ஞானிகள் ஆய்வை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் தமது ஆய்வினூடாக "சூரிய சக்தியைப் பயன்படுத்தி உவர்நீரை நன்னீராக்கும் முறையை" கண்டறிந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வுகளுக்கான வழிகாட்டல்களை கல்லூரியின் ஆசிரியர்களான சு.சிவசங்கரன் மற்றும் திருமதி சோ.சுபாஸ் ஆகியோர் வழங்கியிருந்தனர்.






# இன்று முதல் இருக்கைப்பட்டி கட்டாயம்
## அபராதம் விதிக்கப்படுமென எச்சரிக்கை

அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் ஏனைய வீதிகளில் இருக்கைப்பட்டி அணியாதவர்களுக்கு எதிராக இன்று முதல் அபராதம் விதிக்கப்படவுள்ளதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை அறிவித்துள்ளது.

இருக்கைப்பட்டி சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த 3 மாத கால அவகாசம் கடந்த டிசம்பர் 24ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது என வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் மஞ்சுள குலரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி வாகன சாரதி மற்றும் பயணிக்கும் அனைவரும் இருக்கைப் பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வாகன சாரதி மற்றும் முன் இருக்கையில் அமர்ந்து செல்லும் பயணி ஆகிய இருவருக்கும் இச்சட்டம் பொருந்தும்.

வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், நாடு முழுவதும் இந்த விதிமுறையை மிகவும் கண்டிப்பாக நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

# விபசார விடுதி சுற்றிவளைப்பு; மூன்று பெண்கள் நேற்று கைது

பேலியகொடை தொரண சந்தி பகுதியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபசார விடுதி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மூன்று பெண்கள் பேலியகொடை பொலிஸாரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பேலியகொடை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மூன்று பெண்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் மசாஜ் நிலையத்தின் பெண் உரிமையாளரும் உள்ளடங்குவார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்..

கைதுசெய்யப்பட்ட மூன்று பெண்களும் வத்தளை, கஸ்எல்ல மற்றும் பொகவந்தலாவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 21, 36 மற்றும் 47 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி திறமையை காண்பிக்கும்
## நாசர் ஹுசைன் தெரிவிப்பு



வரவிருக்கும் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி யாரும் எதிர்பார்க்காத திறமைகளைக் காண்பிக்கும் என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நாசர் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

பழக்கமான மைதானங்களில் திறமையான அணிகளின் வரிசையில் இலங்கை அணியும் நுழையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளில் மட்டுமே கவனம் செலுத்தி இலங்கை போன்ற அணியைப் புறக்கணிப்பது மற்ற அணிகளுக்கு ஆபத்தானது என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நாசர் ஹுசைன் கூறியுள்ளார்.

“இலங்கை கடந்த காலங்களில் இருந்து அதே வீரர்களுடன்தான் இருந்து வருகிறது. அந்த திறமையான வீரர்கள் தங்கள் திறமையை உலகிற்கு காட்ட வேண்டிய நேரம் இது என்று நான் நினைக்கிறேன்,” என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில உலகக் கிண்ணங்களில் இலங்கை எதிர்பார்த்த நிலையை எட்டவில்லை என்றாலும், இந்த போட்டியில் அற்புதமான ஒன்றை செய்ய முடியும் என்று ஹுசைன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.




# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் சந்தேகத்திற்கிடமான வாகனம் மீட்பு

## பொலிஸார் தீவிர விசாரணை

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், சந்தேகத்திற்கிடமான முறையில் பூட்டப்பட்ட நிலையில் கைவிடப்பட்டிருந்த சொகுசு வாகனம் ஒன்று பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை வழங்கிய தகவலின் அடிப்படையில், மேற்படி வாகனம் பொலிஸின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதிவேக வீதி போக்குவரத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட இந்த வாகனம், மேலதிக விசாரணைகளுக்காக திஹகொட பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தின் பதிவு இலக்கம் சோதனையிடப்பட்ட நிலையில், அந்த இலக்கத்தில் இரத்தினபுரி பகுதியில் மற்றொரு வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், வாகனத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டையின் பிரதியொன்று தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், அது பொத்துஹெர பகுதியை சேர்ந்த ஒருவருடையது எனத் தெரியவந்துள்ளது.

மேற்படி வாகனம் மத்தள நோக்கிப் பயணித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இதன் பின்னணி தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# கொழும்பு காசல் மகளிர் மருத்துவமனையில் இனி சோதனைக்குழாய் கருத்தரிப்பு சிகிச்சை

கொழும்பு காசல் வீதி மகளிர் மருத்துவமனையில் மிக விரைவில் சோதனைக்குழாய் கருத்தரிப்பு சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அந்த மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் அஜித் குமார தந்த நாராயண தெரிவித்துள்ளார்.

இந்த புதிய வசதிகள் இன்னும் மூன்று மாதங்களுக்குள் செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் மருத்துவமனைகளில் இந்தச் சிகிச்சையைப் பெற முடியாத தம்பதிகளுக்கு, பொதுச் சுகாதாரத் துறையினூடாக ஒரு நியாயமான வாய்ப்பை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

தற்போது இலங்கையில் ஒரு சில தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே இந்தச் சேவை உள்ளது.

ஒரு முறை சிகிச்சைக்கு 2 மில்லியன் முதல் 3 மில்லியன் ரூபா வரை செலவாகிறது.

இந்தச் சிகிச்சை முறை குறிப்பாக, கருப்பை குழாய்களில் அடைப்பு, விந்தணுக்களின் எண்ணிக்கை குறைவாக இருத்தல், ஹோர்மோன் குறைபாடுகள், நீண்டகாலமாக இனங்காணப்படாத மலட்டுத்தன்மைபோன்ற குறைபாடுகள் உள்ள தம்பதியினருக்கு உதவுகின்றது.

அரச மருத்துவமனைகளில் இது அறிமுகமாவதன் மூலம் சாதாரண மக்களும் தங்களது பெற்றோர் கனவை நனவாக்க இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கூட்டணியை பலப்படுத்திய கட்சிகள் வாய்ப்புகளைத் தவறவிட்டது த.வெ.க.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மளமளவென கட்சிகளைச் சேர்த்து அதே சூட்டுடன் பிரதமர் தலைமையில் மதுராந்தகத்தில் பிரம்மாண்ட பிரச்சாரக் கூட்டத்தையும் வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறார் தமிழக பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல். இதனால், தங்களின் கூட்டணியை பலப்படுத்திவிட்ட திருப்தியில் இருக்கிறது அ.தி.மு.க.

எடப்பாடி பழனிசாமியை முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொள்ளவே மாட்டோம் என்று சொல்லிக் கொண்டிருந்த தினகரனையே, பழனிசாமியும் நானும் அண்ணன் – தம்பிகள் என்று பேச வைத்த பராக்கிரமம் பா.ஜ.கவையே சாரும். அப்படி இருக்கையில், பிரேமலதா, ஓ.பி.எஸ், கிருஷ்ணசாமி உள்ளிட்டோரையும் கூட்டணிக்குள் கொண்டு வருவதில் அந்தக் கட்சிக்கு பெரிதாக சிரமம் ஒன்றும் இருக்காது என்றே தெரிகிறது.



வட மாவட்டங்களில் செல்வாக்குடன் இருக்கும் பா.ம.கவும் டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில் வாக்கு வங்கியை வைத்திருக்கும் அ.ம.மு.கவும் அ.தி.மு.க. கூட்டணிக்குள் வந்திருப்பதே அந்தக் கூட்டணிக்கு பலம் தான். பூவை ஜெகன்மூர்த்தி, ஜான் பாண்டியன் உள்ளிட்டோரையும் தங்கள் பக்கமே தக்க வைத்திருப்பதன் மூலம், பட்டியலின வாக்கு வங்கியையும் ஓரளவுக்கு பலமாக்கி இருக்கிறது பா.ஜ.க – அ.தி.மு.க. கூட்டணி.

இதேபோல், தி.மு.கவும் தங்கள் கூட்டணி பலமாக இருப்பதாக நினைத்து மெத்தனம் காட்டாமல், எஸ்.டி.பி.ஐ, தமிழர் தேசியக் கட்சி, வீர முத்தரையர் சங்கம் உள்ளிட்ட புது வரவுகளையும் உள்ளே இழுத்துப் போட்டு கூட்டணியைப் பலப்படுத்தி வருகிறது. எம்.ஜி.ஆர். காலத்திலிருந்தே முத்தரையர் சமூகத்து மக்கள் அ.தி.மு.க. பக்கம் நிற்பவர்கள். அப்படி இருக்கையில், வீர முத்தரையர் சங்கத்தை தி.மு.க. தங்கள் அணிக்கு கொண்டு வந்திருப்பது ராஜதந்திர நடவடிக்கை தான். பா.ம.க. (ராமதாஸ்), தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகளையும் தி.மு.க. இன்னும் கைவிட்டுவிடவில்லை.

இவ்விரண்டு கூட்டணிகளும் இப்படி போட்டி போட்டுக் கொண்டு தங்களைப் பலப்படுத்தி வரும் நிலையில், இவர்களுக்கு சரியான போட்டியைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்பட்ட த.வெ.க, போதிய அனுபவம் இல்லாத காரணத்தாலும் வழிகாட்ட வகை தெரிந்தவர்கள் இல்லாத காரணத்தாலும் தங்களுக்குக் கிடைத்த கூட்டணி வாய்ப்புகளை எல்லாம் தவறவிட்டு தனித்து நிற்கிறது.

அ.ம.மு.க, காங்கிரஸ், தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகள் த.வெ.க. கூட்டணிக்காக தவமிருந்த நிலையில், அதற்கு செயல்வடிவம் கொடுக்கும் எந்த முயற்சியிலும் அந்தக் கட்சி இறங்கியதாகத் தெரியவில்லை. அப்படி எதிலும் இறங்க முடியாத அளவுக்கு, 'ஜனநாயகன்' பட விவகாரத்துக்குள்ளும் கரூர் கூட்ட நெரிசல்வழக்கு விசாரணைக்குள்ளும் விஜய்யை தந்திரமாக முடக்கி விட்டது பா.ஜ.க.

# 15 தொகுதிகள் அடங்கிய பட்டியலை தயாரித்துள்ளது மக்கள் நீதி மய்யம்




இந்தத் தேர்தலில், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள டோர்ச் லைட் சின்னத்தில் போட்டியிடும் திட்டத்தில் இருக்கும் மக்கள் நீதி மய்யம் கட்சி, தங்களுக்கு விருப்பமான 15 தொகுதிகள் அடங்கிய பட்டியலை தயாரித்திருப்பதாக சமூக வலைதளங்களில் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் மக்கள் நீதி மய்யம் கட்சி இதுவரை பெரிய அளவிலான அழுத்தம் எதையும் தி.மு.கவுக்கு கொடுக்கவில்லை. கட்சியின் தலைவர் கமல்ஹாசனுக்கு தரப்பட்ட ஒரே ஒரு ராஜ்ய சபா சீட்டுடன் அக்கட்சி திருப்தி அடைந்து விட்டார் என மக்களவைத் தேர்தலின் போது விமர்சனங்கள் எழுந்த நிலையில், சட்டப்பேரவை தேர்தலில் இரட்டை இலக்கத்தில் ஆசனத்தை பெறுவதற்கான முயற்சியில் இருக்கிறது ம.நீ.ம.

இதுகுறித்து அக்கட்சியின் மத்திய மண்டல நிர்வாகிகள் சிலர் கருத்து தெரிவிக்கையில்,

"தி.மு.க. கூட்டணியில் இருக்கும் அனைத்துக் கட்சிகளுமே இம்முறை கூடுதலான தொகுதிகளில் போட்டியிட்டு தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கின்றன. மக்கள் நீதி மய்யத்துக்கும் அதற்கான தேவை இருக்கிறது. அதற்கேற்ற எண்ணிக்கையில் நாமும் போட்டியிட வேண்டும் என்பது தலைவர் கமலின் விருப்பம். அதற்காக, மாநிலம் முழுவதும் 15 தொகுதிகளை அடையாளம் கண்டிருக்கிறோம்.

அதன்படி, கோவை தெற்கு, கோவை வடக்கு, சிங்காநல்லூர், கவுண்டம்பாளையம், சென்னை வேளச்சேரி, மயிலாப்பூர், மதுரவாயல், அம்பத்தூர், தாம்பரம், சோழிங்கநல்லூர், ஆலந்தூர், தியாகராய நகர், திருச்சி கிழக்கு, ஸ்ரீரங்கம், மதுரை மத்தி ஆகிய 15 தொகுதிகள் எங்களுக்கு வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன. எங்களின் இந்த உத்தேசப் பட்டியலை திமுக தலைமையிடம் வழங்கி இருக்கிறோம்.

சூழலுக்கு ஏற்ப இந்தப் பட்டியலில் இருந்து 3 அல்லது 4 தொகுதிகளை தி.மு.க. எங்களுக்கு ஒதுக்கும் என எதிர்பார்க்கிறோம். குறிப்பாக, கோவை, சென்னை, திருச்சி மாவட்டங்களில் தலா ஒரு தொகுதியை நாங்கள் எதிர்பார்க்கிறோம். எங்களது சொந்தச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்பது தான் எங்களின் விருப்பம். இதையும் நாங்கள் தி.மு.கவிடம் வலியுறுத்துவோம்." என்றனர்.




# காசா - எகிப்திற்கு இடையிலான ரஃபா எல்லை மீண்டும் திறப்பு

## இஸ்ரேல் திட்டம்

இஸ்ரேல் - எகிப்து எல்லை மீண்டும் திறப்பது குறித்து இஸ்ரேல் முக்கிய முடிவு எடுத்துள்ளது.

காசா மற்றும் எகிப்திற்கு இடையிலான ரஃபா எல்லை கடப்பை மீண்டும் திறக்க இஸ்ரேல் திட்டமிட்டு இருப்பதாக அந்நாட்டின் பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

காசாவில் மீட்கப்படாத கடைசி பணயக் கைதியின் உடல் மீட்கப்பட்ட பிறகு இந்த செயல்முறை நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது மீட்கப்படாத கடைசி பிணைக்கைதியான உயிரிழந்த வீரர் மாஸ்டர் சர்ஜெண்ட் ரன் க்விலி தொடர்பாக நடைபெற்ற தேடுதல் வேட்டையில் கிடைத்த உளவுத் தகவல்களை சேகரித்து இஸ்ரேலிய பாதுகாப்பு படைகள் ஆய்வு செய்த பிறகு இந்த எல்லை கடப்பு நடவடிக்கை செயல்படுத்தப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்த ரஃபா எல்லை கடப்பை பாதசாரிகள் மட்டுமே கடக்க முடியும்.

இந்த ரஃபா எல்லையை கடக்கும் அனைத்து பாதசாரிகளும் இஸ்ரேலிய பாதுகாப்பு படையின் முழுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இந்த காசா - எகிப்து எல்லை திறப்பு குறித்த அதிகாரப்பூர்வமான திகதிஇன்னும்அறிவிக்கப்படவில்லை, இருப்பினும் இந்த வார இறுதிக்குள் ரஃபா எல்லை கடப்பு திறக்கப்பட வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.





# அமெரிக்க விமான நிலையத்தில் விபத்து; ஓடுபாதை தற்காலிகமாக மூடப்பட்டது

அமெரிக்காவின் மெய்ன் நகர விமான நிலையத்தில் ஏற்பட்ட விமான விபத்தை தொடர்ந்து ஓடுபாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மெய்ன் மாகாணத்தின் பேங்கர் சர்வதேச விமான நிலையத்தில் எதிர்பாராத விதமாக விமான ஒன்று புறப்படத் தயாரான போது விபத்துக்குள்ளானது.

இந்த விமான விபத்தை விமான நிலைய நிர்வாகம் உறுதிப்படுத்தியுள்ளது, ஆனால் உயிரிழப்புகள் அல்லது விபத்துக்கான காரணம் குறித்து எந்தவொரு காரணத்தையும் விமான நிலைய நிர்வாகம் தகவல் வெளியிடவில்லை.

இந்த விபத்து சம்பவம் குறித்த முதற்கட்ட தகவல் வெளியாகி வரும் நிலையில், சம்பவ இடத்துக்கு மீட்பு மற்றும் பாதுகாப்பு படையினர் குவியத் தொடங்கியுள்ளனர்.

விமான நிலைய அதிகாரிகள் வெளியிட்ட சமூக வலைத்தள அறிவிப்பில், விமான நிலையத்திற்கு பயணிகள் வருவதை தவிர்க்கவும், தற்காலிகமாக விமான ஓடுபாதை மூடப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர். அத்துடன் இந்த விமானத்தில் 12 பயணிகள் வரை பயணிக்க முடியும் என்று தெரியவந்துள்ளது.




# பசிலன் படகு கவிழ்ந்து விபத்து: பலியானோர் 15 ஆக அதிகரிப்பு

பிலிப்பைன்ஸின் பசிலன் மாகாணத்தில் 350 இற்கும் மேற்பட்டோருடன் சென்ற படகு கவிழ்ந்ததில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது.

படகில் 332 பயணிகள் மற்றும் 27 ஊழியர்கள் இருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் 28 பேர் காணாமல் போயுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

படகு கவிழ்ந்ததிற்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை என்றும் இருப்பினும், படகு புறப்படுவதற்கு முன்னர் முறையான ஆய்வு செய்யப்பட்டதாகவும், அதிகப்படியான பயணிகள் ஏற்றப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## குடியரசு தின விழா கோலாகலம்:

# சென்னையில் ஆளுநர் ரவி தேசியக் கொடி ஏற்றினார்

இந்திய முழுவதும் குடியரசு தின விழா இன்று உற்சாகத்துடன் கொண்டப்படுகிறது. சென்னை மெரினாவில் நடைபெறும் விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இந்தியாவின் 77 ஆவது குடியரசு தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, சென்னை மெரினா கடற்கரை காமாஜர் சாலையில் உழைப்பாளர் சிலை எதிரே காலை 8 மணி அளவில் குடியரசு தின விழா நடைபெற்றது. இதில் தேசியக் கொடியை ஆளுநர் ஆர்.என்.ரவி ஏற்றிவைத்தார். அப்போது ஹெலிக்கொப்டரில் இருந்து மலர் தூவப்பட்டது. தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

பின்னர் இராணுவ படைப் பிரிவு, கடற்படை பிரிவு, இராணுவ கூட்டுக் குழல் முரசு இசைப் பிரிவு, வான்படை பிரிவினரின் அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் ஏற்றுக்கொண்டார். இதன்பிறகு, அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடைபெறும். பாடசாலை, கல்லூரி மாணவ, மாணவிகளின் பாரம்பரிய நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அதன் பின்னர், வீரதீர செயலுக்கான அண்ணா பதக்கங்களை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

இதில் துணை உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், தலைமைச் செயலர் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.





கனடா முரசு

திங்கட்கிழமை 26/01/2026

## ஹாமில்டனில் தீ விபத்தில் முதியவர் ஒருவர் மரணம்

கனடாவின் ஹாமில்டன் நகரில் ஏற்பட்ட வீட்டு தீ விபத்தில் 70 வயது முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஸ்படினா அவென்யூ பகுதியில், டன்ஸ்மூர் 02▶



# சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தத்தை தொடர கனடாவிற்கு எந்தவித நோக்கமும் இல்லை

## ட்ரம்பின் மிரட்டலுக்கு பிரதமர் கார்னி பதில்

**சீனாவுடன் ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தைத் தொடர கனடாவிற்கு எந்த நோக்கமும் இல்லை என்று பிரதமர் மார்க் கார்னி விளக்கமளித்துள்ளார்.**

**கனடா, சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண்டால், கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 100 சதவீதம் வரி விதிக்கப்படும் என்ற டொனால்ட் ட்ரம்பின் மிரட்டலுக்குப் பதிலளிக்கும் விதமாக இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.**

**சீனாவுடனான தனது சமீபத்திய ஒப்பந்தம், சமீபத்தில் வரிவிதிப்பால் பாதிக்கப்பட்ட சில துறைகளில் மட்டுமே வரிகளைக் குறைத்துள்ளது என்று கார்னி தெரிவித்துள்ளார்.**

மேலும், அமெரிக்கா மற்றும் மெக்சிகோவுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், முன் அறிவிப்பு இல்லாமல் சந்தைப் பொருளாதாரம் அல்லாத நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளக்கூடாது என்ற உறுதிமொழிகள் இருப்பதையும் கார்னி சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட சில சிக்கல்களைச் சரிசெய்வதே சீனாவுடன் நாங்கள் செய்துள்ள ஒப்பந்தம் என கார்னி குறிப்பிட்டுள்ளார்.

2024 இல், கனடா சீனாவில் இருந்து வரும் மின்சார வாகனங்கள் மீது 100 சதவீத வரியும், எஃகு மற்றும் அலுமினியம் மீது 25 சதவீத வரியும் விதித்து, அமெரிக்காவைப் பின்பற்றியது.


இதற்குப் பதிலடியாக, சீனா கனேடிய கனோலா எண்ணெய் மற்றும் பிண்ணாக்கு மீது 100 சதவீத இறக்குமதி வரியையும், பன்றி இறைச்சி மற்றும் கடல் உணவுகள் மீது 25 சதவீத வரியையும் விதித்தது.

இந்த மாதம் சீனாவுக்குச் சென்றிருந்தபோது அமெரிக்காவுடனான தனது நிலைப்பாட்டிலிருந்து விலகி, கார்னி, சில கனடியப் பொருள்களுக்கான வரிகளைக் குறைப்பதற்குப் பதிலாக, சீன மின்சாரக் கார்கள் மீதான கனடாவின் 100 சதவீத வரியைக் குறைத்தார்.

கனடாவிற்கு வரும் சீன மின்சார வாகன ஏற்றுமதிகளுக்கு 6.1 சதவீத வரி விகிதத்தில், ஆரம்பத்தில் ஆண்டுக்கு 49,000 வாகனங்கள் என்ற வரம்பு விதிக்கப்படும் என்றும், இது ஐந்து ஆண்டுகளில் சுமார் 70,000 என உயரும் என்றும் கார்னி கூறியுள்ளார்.

மேலும், சீன மின்சார வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட ஆரம்ப வரம்பு, கனடாவில் ஆண்டுதோறும் விற்கப்படும் 1.8 மில்லியன் வாகனங்களில் சுமார் 3 சதவீதம் என்றும், அதற்குப் பதிலாக, மூன்று ஆண்டுகளுக்குள் கனடிய வாகனத் துறையில் சீனா முதலீடு செய்யத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சீனாவுடன் கனடா நெருங்குவதை உணர்ந்த ட்ரம்ப், சமூக ஊடகப் பதிவில் மிரட்டல் விடுத்தார். அதில், கார்னி, சீனாவிலிருந்து அமெரிக்காவிற்குப் பொருள்கள் மற்றும் உற்பத்திப் பொருள்களை அனுப்புவதற்காக கனடாவை ஒரு இறக்குமதித் துறைமுகமாக மாற்றப் போகிறார் என்று நினைத்தால், அவர் மிகவும் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார் என்று குறிப்பிட்டிருந்தார்.



# அவுஸ்திரோலியா செல்கிறார் கனடா பிரதமர் மார்க் கார்னி

கனடா பிரதமர் மார்க் கார்னி மார்ச் மாதத்தில் அவுஸ்திரோலியாவுக்கு அதிகாரபூர்வ விஜயம் மேற்கொள்ள உள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரோலிய பிரதமர் ஆண்டனி ஆல்பனீஸ் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில், வலிமையான நாடுகள் பொருளாதார ஒருங்கிணைப்பை ஆயுதமாகவும், சுங்க வரிகளை அழுத்தம் கொடுக்கும் கருவியாகவும் பயன்படுத்துவதை கடுமையாக விமர்சித்த, கார்னியின் டாவோஸ் உரைக்கு அவர் முழுமையான ஆதரவை வெளியிட்டுள்ளார்.

"என் நண்பர் மார்க் கார்னி மார்ச் மாதத்தில் அவுஸ்திரோலியாவுக்கு வருகிறார். அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார்," என்று ஆல்பனீஸ் தெரிவித்துள்ளார்.

மார்க் கார்னியின் இந்த அவுஸ்திரோலியா விஜயம், கடந்த ஒக்டோபரில் கனடா - அவுஸ்திரோலியா உறவுகள் மேலும் வலுப்பெற்றதற்குப் பின்னரே நடைபெறுகிறது. அப்போது இரு நாடுகளும் முக்கிய கனிம வளங்கள் தொடர்பான ஒத்துழைப்பு மற்றும் வர்த்தகத்தை ஊக்குவித்து வலுப்படுத்தும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.




## ஹாமில்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரோடு மற்றும் கேஜ் அவென்யூ தெற்கு சந்திப்புக்கு அருகே உள்ள வீட்டில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தில் வீட்டில் வசித்து வந்த ஒருவர் கடுமையாக காயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் வெளியிடப்பட்ட தகவலில், அந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

தீ சேதம் வீட்டின் ஒரு அறைக்குள் மட்டுமே ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தீ பரவல் ஏற்பட்ட காரணம் மற்றும் சம்பவ சூழ்நிலைகள் குறித்து தற்போது வரை தெளிவான தகவல்கள் வெளியாகவில்லை.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எனினும், தற்போது குற்றச்செயல் இடம்பெற்றதாக எந்த சந்தேகமும் இல்லை என்று பொலிஸார் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளனர்.



# கனடாவில் கடும் பனிப்பொழிவு எச்சரிக்கை பல பகுதிகளில் பாடசாலைகள் மூடப்பட்டன

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தின் பல பகுதிகளில் 60 சென்ரி மீற்றருக்கும் அதிகமான பனிப்பொழிவு ஏற்படும் என கனடிய சுற்றாடல் திணைக்களம் முன்னறிவிப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து, இன்று பாடசாலைகள் மூடப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பாடசாலைகள், நிர்வாகக் கட்டடங்கள் மற்றும் குழந்தை பராமரிப்பு மையங்களை மூடுவதாக டொரண்டோ மாவட்ட பாடசாலை சபை அறிவித்துள்ளது.

இன்று திங்கள்கிழமை நடைபெற இருந்த உயர்நிலைப் பரீட்சைகள் இந்த வாரத்தின் பிற்பகுதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

டொரண்டோ கத்தோலிக்க பாடசாலை சபையும் அனைத்து பாடசாலைகளை மூடுவதாக அறிவித்துள்ளது.

பாடசாலை பஸ் சேவைகள், குழந்தை பராமரிப்பு, படசலைக்கு முன்- பின் நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இன்று திங்கள்கிழமை நடைபெற இருந்த பரீட்சைகள் ஜனவரி 29 இற்கு மாற்றப்பட்டுள்ளன.

ஸெயிண்ட் மைக்கேல்ஸ் கல்லூரி மற்றும் மேபின் பாடசாலை (தனியார் தொடக்கப் பாடசாலை) இன்று முழுமையாக மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யோர்க், டர்ஹாம், டஃபரின்-பீல், ஹால்டன், ஹாமில்டன், நயாகரா, பகுதிகளில் இயங்கி வரும் பாடசாலைகளும் பிரெஞ்சு மொழிப் பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களும் மூடப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.












# டொரன்ரோ நகரில் இடம்பெற்ற 'எங்கட பெடியள்' கலை நிகழ்ச்சி

கனடாவின் டொரன்ரோ நகரில் அமைந்துள்ள டூறம் மாநாட்டு மண்டபத்தில் 'எங்கட பெடியள்' என்ற கருப்பொருளில் மாபெரும் கலை நிகழ்ச்சியொன்று நடைபெற்றது.

இதன் போது இலங்கையின் வளர்ந்து வரும் இசைக்கலைஞரான ரெப் பாடகர் வாகிசன் உள்ளிட்ட குழுவினரின் இசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

மிகவும் நேர்த்தியாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த 'வாகீசன் லைவ் இன் டொரன்ரோ' இசைச் சங்கமம், உலகத் தமிழர்களை இசையாலும் உணர்வாலும் ஒன்றிணைக்கும் ஒரு வரலாற்றுப் பாலமாக அமைந்திருந்தது.

இக்கலைவிழாவில், 'சிலோன் ராப்' சொல்லிசைக் கலைஞர்களின் பங்களிப்பும் அவர்களின் ஆழமான தமிழ்ப் பற்றும் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஒன்ராறியோ மாநில சுகாதார இணை அமைச்சரும், ஒன்ராறியோ சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம், சொல்லிசைக் கலைஞர்களை நேரில் பாராட்டி கௌரவித்ததுடன் ஒவ்வொரு கலைஞரின் தனித்துவத்திற்கும் ஏற்ப பெறுமதிமிக்க நூல்களை பரிசாக வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வின் மிக முக்கிய சிறப்பம்சமாக, பாடகர் வாகீசனுக்கு ஒரு 'வேல்' பரிசாக வழங்கப்பட்டது. வாகீசனை எதிர்காலத்தின் ஒரு சிறந்த தலைமையாகக் கருதுவதாகவும், அதன் அடையாளமாகவே இந்த வேலை அவருக்கு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் டொறன்ரோவில் அமையவிருக்கும் தமிழ் சமூக மையத்திற்காக ஒரே இரவில் ஒரு மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான நிதி திரட்டப்பட்டது. உலகளாவிய தமிழ்ச் சூழலில், புலம்பெயர் தமிழ் மக்களால் கட்டப்படும் முதலாவது தமிழ் சமூக மையம் இது என்பதால், எமது எதிர்கால சந்ததியினருக்காக ஒரு நிரந்தரமான இடத்தை உருவாக்கித் தரும் வரலாற்றுப் பொறுப்பை ஏற்று தமிழ்ச் சமூகம் தனது பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற அறைகூவல் விடுக்கப்பட்டது.

















